# இந்துசாதனம்

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8.00
ஜேலாவாய்ப்பகுதி: " ரூ 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ 9-00
" அரைக்கலம் ரூ. 4-50
" கால்கலம் ரூ 3-00
அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சுஎ. } யாழ்ப்பாணம்:—விபவஹு ஆடிமீ சஉ, (1928 ஜூலை 19) வியாழக்கிழமை. { இலக்கம்—சு.


உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவபூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## இலங்கை ஆயுள்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்பொண்டண்கோஸ்) விதிதகற்பனா மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள ரசமார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

## சக்தி விரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான விரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி விரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் துரிதஸ்கலிதமென்னும் ஓர்வித ரோகினால் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினால் (Mal ria fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, விரியவிருத்தி, தேகபலம், சரீரசோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி விரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினாலும் பலஈனத்தினாலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தானந்த "மகாசஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ரூத்தல் மருந்து | ரூபா | 10 | 00 | வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ " | " | 5 | 00 | |
| ¼ " | " | 3 | 50 | |

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர், டக்டர் எம் என். பின்ளை ஏ. எம். ஏ. சீ
சீவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் வாதிரிவல்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயாரிக்கப்பட்டது மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினால் எங்களால் தீர்க்க முடியுமானால் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P மூலமாய் அனுப்புவோம்; அல்லது தீராதரோகமாயிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொடுவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts முத்திரையும் அனுப்பினால் விபரமாகப் பதிலெழுதப்படும்
(Q 104)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீங்கி தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦. அரைரூத்தலுக்கு ரூபா க௦. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாய்ராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.
(M. 36.)

## ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆருடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்வோம். கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணு 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—
க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
(Q. 101.)

## சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும் ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணு 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள நேரத்தை யாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

### சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயம்பெற்று வருவதுமன்றி செய்வினை பேய் தல்வினை யுண்டாக்கும். எல்லா விதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
ஜோதிட நிலயம்,
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா

## கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.
(H 61)

## சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.

எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
நரம்புவலி
கில்வாய்வு
இடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

# லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

உடன் சுகந்தரும்.




43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பெரிதல்ல.

பிறுக: கொழும்பு சேராத

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

2—28. Litts Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.
(Y. 51.)

## திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

—:o:—

விபவ வருஷ சித்திரை மீ முதல் 12 மாசங்களுக்குப் பொருளுபகரிக்கப் பொருந்திக்கொண்டவர்கள.

மூன்றும் மாசம் பொருளுபகரித்தவர்கள்.

| | |
|---|---|
| வைத்தீஸ்வரசுவாமி கோயில் வண். | 10-00 |
| ஸ்ரீ க. முத்துக்குமாரு வைத்தியர் | 10-00 |
| ,, சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் | 10-00 |
| ,, சி. மு. கணபதிப்பிள்ளை | 10-00 |
| ,, வி. சி. விசாலித்தம்பி | 10-00 |
| டாக்குத்தர் ஈ. இ. பொன்னம்பலம் | 10-00 |
| பிரமஸ்ரீ சி. சரவணபக்குருக்கள் | 5-00 |
| ஸ்ரீ வை. சி. சி. குமாரசுவாமி | 5-00 |
| ,, ஈ. தங்கம்பிள்ளை | 5-00 |
| ,, சி. சி. சண்முகம் | 5-00 |
| ,, இ. க. சிவசுப்பிரமணியம் | 5-00 |
| ,, பொன்னுத்துரை | 5-00 |
| ,, சுந்தரம் | 5-00 |
| ,, வி. தம்பிபஞ்சாக்ஷரம் கண்டி | 5-00 |
| ,, க. ஆ. கந்தப்பசேகரன் கொழும்பு | 5-00 |
| ,, ச. இளையதம்பி முள்ளியவளை | 10-00 |
| ,, ம. செல்லத்துரை மூல்லைத்தீவு | 5-00 |
| ,, அ. கனகசபாபதி ,, | 5-00 |
| ,, கா. பொன்னையா | 5-00 |
| ஸ்ரீமதி க. சுந்தரம் | 5-00 |
| இந்துசாதனக் காரியாலயம் | 2-00 |
| சின்னத்தம்பி விசுவலிங்கம் சபாபதிப்பிள்ளை கடை உண்டிகைப்பெட்டி | 9-36 |
| சில்லறை | 2-00 |
| | 148-36 |
| 18-6-28 ல் வெளிப்படுத்தியதொகை | 259-05 |
| ஆகத்தொகை. | 407-41 |

வண்ணார்பண்ணை, 19—7—28. } சி. மு. சின்னத்தம்பி. (மீ. 1251)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ வருஷ ஆடி மீ ௩௨ வியாழக்கிழமை.

## மனந்தடுமாறேல்.

க

கடவுளொருவர் உண்டு என்னும் கோள்கையுடைய எந்தச் சமயத்தவனுக்கும் மார்க்காபிமானம்போற் சிறந்த தோன்றுமில்லை. நாம்; உண்மையான சமயாபிமானமுடையவன் தன்னுயிரையும் திரணமாக மதித்துத் தன்கொள்கையை நிலைநாட்டக் கண்டிருக்கிறோம்; இவ்வாறான சமயாபிமானம் பூண்டவன் தன்னைப்பற்றியேனும் தன் குலத்தைப்பற்றியேனும் தன்தேசம் சாதி பாஷை என்னுமிவைகளைப் பற்றியேனும் பிறர் குறைசொன்னால் அவற்றை அதிகம் பொருட்படுத்தான்; ஆனால் மார்க்கத்தைப்பற்றி யாராயினும் குறைசொல்லத் துணிவரேல், குறைசொல்பவர் நெருங்கிய சுற்றமித்திரராயினும் தனக்கு வேண்டியவராயினும் முன் பலநன்மைகளைத் தனக்குச் செய்தாராயினும் அவற்றைப் பொருட்படுத்தாது மார்க்காபிமானமுடையவன் அவருடன் மாறுபட்டு அவருடன் பகைமை பாராட்டுவன். இந்த மார்க்காபிமானமில்லாதவன் நடைப்பிணமாவன்.

இவ்விலங்கையிலே இந்துக்களென்று அரசினராலும் மற்றைச் சமயத்தாராலுஞ் சொல்லப்படுபவர்கள் சைவசித்தாந்த சமயத்தவர்களாவர்; ஒரு சமயத்தை அநுஷ்டிப்பவர்கள் எல்லாரும் அந்தச்சமய உண்மைகளையும் கோட்பாடுகளையும் நட்பமாயறிந்திருப்பரென நாம் காத்திருத்தல் முடியாத காரியம். அந்தந்தச் சமயத்திற்குரிய சாத்திரங்களை உணர்ந்த பெரியோர்களின் உபதேசத்தின்படியும் அப்பெரியோர் நடப்பதைப் பின்பற்றியும் அங்ஙனம் நடப்பவர்களின் தொகைதான் அதிகமாகும். இங்குள்ள சைவசமயிகளுட் பெரும்பாலார் அங்ஙனமானோரேயாவர்; இதுகாறும் இலங்கையிலுள்ள சைவர்கட்கும் இருவகையான கிறீஸ்தவர்கட்குமிடையே சமய விவாதங்களும் பிணக்குகளும் நேர்ந்தனவேயன்றிச் சைவர்கட்கும் பௌத்தர் இஸ்லாமானவர்கட்குமிடையே விவாதங்களும் பிணக்குகளும் நேர்ந்ததில்லையெனலாம். இலங்கையிலுள்ள சைவம் பௌத்தம் இஸ்லாம்மார்க்கம் கிறீஸ்துமார்க்கம் என்னும் நான்கும் ஒன்றற்கொன்று பெரும் பேதமான மதங்களென்பதை எவருமறிவர். இந்தியாவிலே இச்சமயத்திலேயே பலவகையானபேதங்களுண்டு இனி அங்குள்ள சைவர்களுக்கிடையே இக்காலத்திற் பல பேதங்கள் உண்டுபட்டிருக்கின்றன. வேதங்களையும் சிவாகமங்களையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் புராணங்களையும் தமக்கு ஆதாரமாகக்கொண்டுள்ள உண்மையான சித்தாந்த சைவக்கோள்கையுடையவர்களைத் தவிர, இன்னும் பலவகையான சைவர்கள் இந்தியாவில் இப்பொழுது முளைத்து வருகிறார்கள்; பிராமணரையும் வேதாகமங்களையும் வடமொழியிலுள்ள மந்திரங்களையும் கிரியைகளையுங் கைக்கொள்ளாதார் சிலர் தாங்களுஞ் சைவர்களென்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்; வடமொழியை ஒதுக்கித் தனித்தமிழ்ச்சைவர்களென்று சிலர் இருக்கின்றார்கள்; வருணாச்சிர தருமங்களை அலட்சியஞ் செய்து கொண்டு ஏகபோகமாகச்சிலர் சைவரென்றிருக்கின்றார்கள். இன்னும் பலவகையான பேதமுடையோர் சைவர்களென்னும் பெயருடன் இந்தியாவிலுளர் ஆனால் இலங்கையில் இந்தவகையான விபரீதங்கள் இல்லையென்று சொல்லலாகும்.

## நெடுந்தீவுவாசிகளின் பெருந்தகைமை.

மதுபானத்தை ஒழிப்பதில் தாமுங்கூட, தாமுங்கூட என்று வாய்ப்பறையறைந்த நமது அரசினர், நெடுந்தீவு மதுக்கடைகள் விஷயத்தில் தங்கள் உள்ளக்கிடக்கை இன்னதென்பதை ஒருவாறு வெளிப்படுத்திவிட்டார்கள் காருண்ணியந் தங்கிய நமது அரசினர் ஊரவர்களின் நலத்தைக் காட்டிலும் மதுப்பிரியர்களைத் திருப்திப்படுத்துவதிலேயே அதிக கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர் போலும். நெடுந்தீவிலே அங்குள்ளார் கேளாமலிருக்க, அரசினர் கள்ளுக்கடைகள் இரண்டை ஊர்ச் சனங்களின் நோக்கத்திற்கு விரோதமாகத் திறக்க நிச்சயித்தனர். சென்றவாரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் குறித்த கள்ளுக்கடைகளைக் குத்தகையாக விற்றற்கு நியமனஞ்செய்து அரசினர் விளம்பரப்படுத்தினர். இதனைக் கேள்வியுற்று நெடுந்தீவிலுள்ள சனங்கள் 30 பேர்வரையில் தங்கள் சிரமத்தையும், மற்றும் வசதியீனங்களையும் பொருட்படுத்தாமல் யாழ்ப்பாணக் கச்சேரிக்குப் புறப்பட்டு வந்து தங்களூரிலே கள்ளுக்கடைகளைத் திறக்கவேண்டாமென்றும் தங்களுக்கு மதுபானம் வேண்டியதில்லையென்றும் வடமாகாணத் தலைவருக்கு விண்ணப்பஞ் செய்தனர். சனங்களின் ஈடேற்றத்தின் பொருட்டும் மதுபானத்திற்கு மாறாகவும் உழைப்பதாகச் சொல்லும் அரசினர் மேற்படி நெடுந்தீவு வாசிகளின் விண்ணப்பத்தைப் பொருட்படுத்தாது கள்ளுக் கடைகளை விலைகூறத் தலைப்பட்டனர் குத்தகை கேட்பார் எவருமே வரவில்லை மதுபான நீக்கத்திற்கு விரோதமானவர்களும் இந்த விஷயத்திற் றலையிடவில்லை சாவகச்சேரி கொடிகாமம் முதலிய விடங்களில் வசிக்கும் கள்ளுக்குத்தகைகாரரும் மேற்படி குத்தகைக்கு வாங்கத் துணியவில்லை. இதனால் அத்தினத்தில் மேற்படி கள்ளுக்கடைகளின் குத்தகை விலைப்படாதொழிந்தது இனி அரசினர் என்ன உபாயஞ்சூழ்வதற்கு யோசிக்கின்றனரோ அறிகிலேம் நெடுந்தீவு வாசிகள் செய்த இச்செயற்கருஞ் செய்கையை ஏனைய இடங்களிலுள்ள அபிமானிகளும் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

## உலகம் பலவிதம்.

(முன்றொடர்)

இப்படியாக, எனது தாயார் "ஆச்சி, பிள்ளை படிப்பதை நீ போய்நின்று கெடுக்காதே அவர்கள் படிக்கட்டும்; நீ இங்கேவா" என்று பாட்டியாரைக் கூப்பிட, அதுகேட்ட பாட்டி "ஐயோமகளே, கிழவிமுறையைப் பொறுத்துக்கொள்; உன்பிள்ளை படித்துக்கொட்டுவதை நான் கெடுக்கவில்லை; சொல்வதென்ன தாய் தகப்பன் முதலிப்படித்திருந்தாலல்லவோ இப்பிள்ளை படிக்கும்" என்று புறங்கூறிக்கொண்டு பாட்டியார் போய்விட, உபாத்தியாயர் என்னை நெருக்கித் தமிழ் நெடுங்கணக்கில் உயிரெழுத்தைச் சொல்வித்தார், அவர் ஒவ்வொன்றையும் 12 முறை சொன்னபின் நான் ஒருமுறையாக ஒருவாறு சொல்லி முடித்தேன்; ஒவ்வொரு உயிரெழுத்தையுஞ் சொல்லும்போது என்னுயிர் ஒவ்வொருமுறையும் போய் மீள்வதுபோல் எனக்கிருந்தது; உயிரெழுத்தைச் சொன்னபின் மெய்யெழுத்தைச் சொல்லும்படி சட்டம்பியார் என்னை நெருக்க, "இப்படி நெருக்கினால் நாளைக்கு நான் படிக்கவாராமற் காய்ச்சலென்று கிடப்பேன்" என உபாத்தியாயருக்குச் சொல்ல அவர் மெய்யெழுத்தை அப்பொழுது சொல்வித்தாராது விட்டார். "தம்பி, நீ மெத்தக் கெட்டிக்காரன்; இன்றைக்குப் படித்தபடிப்புப் போதும்; ஒரேநாளில் அதிகம்படிக்கவொண்ணாது. ஆனால் இன்றைக்கு நல்லநாளாயிருந்தபடியால் இலக்கமெண்ணு நற்கும் பழகவேண்டும்; உனக்கு எண்ணத் தெரியுமோ" என்று உபாத்தியாயர் என்னைக் கேட்க நான் "ஒன்றுதொடங்கிப் பத்துவரைக்கும் எண்ணத்தெரியும்" என, "சரி, எண்ணுபார்ப்போம் என்றார்.

* * *

நான் "ஒண்டு" என்றேன்; உபாத்தியாயர் அப்படியல்ல "ஒன்று" என்று என்னைத் திருத்த நான் அவர் சொன்னபடி சொல்லிவிட்டு "இரண்டு" என்றேன்; அவர் என்னைத் திருத்தி "இரண்டு" என்றார்; அவர் சொன்னபிரகாரம் நான் சொல்லிவிட்டு "மூண்டு" என்றேன்; அப்படியல்ல "மூன்று" என்று அவர் என்னைத் திருத்த "உபாத்தியார், நீங்கள் முதல் எண்ணுங்கள் உங்களைப்பார்த்து நான் பின் எண்ணுகிறேன் எனச் சொல்ல உபாத்தியாயர் சிரித்து "பிள்ளையே, ஒன்று தொடக்கம் மூன்று வரையுந்தான இந்தச் சங்கடம்" என்று எனக்குச் சொன்னார் இதற்கிடையில் எனது தாயார் அங்கே வந்து "உபாத்தியார், தம்பி இன்று படித்தது போதும்; இனி நாளைக்குப் படிக்கட்டும்" என்று சொல்ல அதனைக்கேட்ட நான் துள்ளியெழுந்து கூட்டிலிருந்துவிடுபட்ட நாவியைப்போல் அதிக சந்தோஷத்துடன் ஓடிப்போய் விட்டேன். பின்னரும் உபாத்தியார் என்னைக் கூப்பிட்டார்; நான் வீட்டின் உட்பக்கத்தில் நின்று "என்ன" என்று கேட்டேன்; "இந்தா உன் ஏட்டை எடுத்துக்கொண்டுபோ" எனலும், அதை அம்மாவிடங்கொடுத்தனுப்பும்படிசொல்லி விட்டு நான் போகாதிருந்தேன்.

* * *

ஒருநாள் நான் போசனஞ் செய்து கொண்டிருக்கும்போது என் தாயார் என்னைப்பார்த்து "மகனே, நீ கெட்டித்தனமாகப் படித்தல்வேண்டும்; விளையாட்டைப்பற்றிய சிந்தனையைவிட்டு எப்போதும் படிப்பைப் பற்றிய சிந்தனையாகவே இருத்தல் வேண்டும்" என்று சொல்ல, நான் "அம்மா, எனக்கு எந்த நேரமும் படிப்பைப்பற்றிய சிந்தனை தான்" என்றேன். "அப்படியானால், நீ உபாத்தியார் வருநேரத்திலல்லாமல் மற்றும் நேரத்திற் படிக்கக்காணேனே" என்று என் தாயார் சொன்னார் "அம்மா, அப்படியல்ல; என் உபாத்தியார் பாடஞ் சொல்லித்தரவருமவரைக்கும் ஐயோ! உபாத்தியார் வரப்போகிறாரே; படிக்க வேணுமே; இன்றைக்கு அவர் வாராமல் விடமாட்டாரா; அவருக்கு ஏதும் சுகவீனம் வரக்கூடாதா; சுகவீனம் வந்தால் அவர் வாராமல்விட நான் படியாமல் விளையாடித் திரியலாமே" என்பதுதான் எனக்கு எந்நேரமும் சிந்தனை;. நேற்றுப் பொழுதுபட நான் படுக்கைக்குப் போகும்போது 'ஐயோ! கடவுளே, இந்த இரா விடியாமலிருக்கவேணும்; விடிந்தாற்றானே உபாத்தியாயர் வந்து என்னைப் படிக்கச்சொல்லி நெருக்குவார்' என்று நினைத்துக்கொண்டு படுத்தேன்; ஆனால் அது வழக்கம்போல் விடிந்து விட்டது என்று நான் சொல்ல என் தாயார் சிரித்து, பின் நான் சொன்னவைகளை என் தகப்பனாருக்குச் சொல்ல அவருஞ் சிரித்துவிட்டு என்னைக் கூப்பிட்டு 'கவனமாகப் படிக்கவேண்டும்' என்று பல புத்திகளைச் சொன்னார்; தகப்பனார் சொன்ன புத்திகளெல்லாம் அந்த நேரத்தில் எனக்கு வேம்புபோலிருந்தன.

## அரசியல் விசாரணைச் சங்கத்தாரின் அறிக்கைப்பத்திரம்.

சில காலத்துக்குமுன் இலங்கைக்கு வந்து பல பாகங்களில் அரசியல்விஷயமாக விசாரணை செய்து சென்ற சங்கத்தாரின் அறிக்கைப் பத்திரம் இலங்கையிலும் இங்கிலாந்திலும் வெளியிடப்பட்டிருக்கின்றது அதன் விபரங்களைப் பின்னர் வெளியிடுவோம்.

## ரூபா 750 அபராதம்

வண்ணார்பண்ணையிலுள்ள ஆயுர்வேத வைத்தியன் ஸ்ரீ சின்னத்தம்பியின மனைவி சோரமாக அந்நியநாட்டுக் குடிவகை விற்றதாக அப்பெண்மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது அந்த வழக்குச் சென்ற 12உ யாழ்ப்பாண பொலிஸ் கோட்டில் விளங்கப்பட்டு அப்பெண்ணுக்கு ரூபா 750 அபராதமும், அவ்வபராதத்தொகை இறுக்காவிடின் 6 வாரக் கடுழியச்சிறையும் விதிக்கப்பட்டன.

## சுப்பிறீம்கோடு.

இந்த ஜூலை மீ 16உ சுப்பிறீம்கோட்டு விசாரணை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. விளக்கத்திற்கு வழக்குகள் இருக்கின்றன. முதல் விளக்கத்திற்கு எடுக்கப்பட்டது மன்னாரில் நார்முகமமது என்பவனை, தழும்பு கினியப்பு கொலைசெய்தானெனவும், போர்ணுட் பெரிராவும், ஜேம்ஸ் வீரசிங்கும் உதவியாயிருந்தார்களெனவும் கொண்டுவரப்பட்ட வழக்கேயாகும். இது இன்றுவரையும் விளக்கம் நடந்து கொண்டேயிருக்கிறது.

## யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

1929-ம் ஆண்டுப் பிரவேச பரீக்ஷைக்குரிய பாடங்களைப்பற்றி மேற்படி சங்கக் காரியதரிசி பின்வருமாறு தெரிவிக்கின்றார் பாடவகை இரண்டும், மூன்றும் 1928-ம் ஆண்டுப் பரீக்ஷைக்கு நியமிக்கப்பட்டபிரகாரமாம் பாடவகை ஒன்றில் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழுக்குப் பதிலாக மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழும், சடகோபரந்தாதிக்குப் பதிலாக பழமலையந்தாதியும், கல்விசைப்புலவர் 2-ம்பாகத்துக்குப்பதிலாக வீரபத்தினியும் மாற்றப்பட்டிருக்கின்றன. பாடவகை நாலில் கணிதம் தமிழ்8-ம்வகுப்புக்குரியபாகம்) ஐந்தாம் பாடமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

## கதிர்காம யாத்திரை.

இந்த, ஜூலை மீ 27-ம்உ கதிர்காமத்திற்கும் திசைமாறுவுக்கும் மத்தியில், கதிர்காம யாத்திரிகரின் வசதியை உத்தேசித்து ஜலசம்பந்த சங்கத்தாரால் போககாப்பெலச என்னுமிடத்தில் ஓர் மடத்தைக் கட்டுவதற்கு அஸ்திவாரமிடப்படுமெனத் தெரிகிறது. அந்த இடத்தில் ஷை சங்கத்தாரால் ஓர் கிணறும் வெட்டப்பட்டுக் கட்டப்பட்டிருக்கிறது. இந்தவிஷயத்தில் சிரத்தையுள்ள எல்லோரையும் அப்பொழுது சமுகந்தந்து ஏதுமாது ஷை சங்கத்தார் விரும்புகிறார்கள். கதிர்காமத்திற்குச் செல்லும் யாத்திரிகர் அடையுந் தண்ணீர்க்கஷ்டத்தை நீக்குதற்கு முன்வந்த ஷை சங்கத்தாரின் செயல் வியக்கத்தக்கதே. அவ்விடத்திற் சென்றவருட யாத்திராகாலத்தில் ஒருபேணி தண்ணீர் 10 சதமாக விற்கப்பட்டதாம். கதிர்காமயாத்திரிகர் தண்ணீர் வேண்டியடைந்த கஷ்டம் இதனால் குறையுமென்பதற்குச் சந்தேகம் இல்லை.

## பக்கிங்காம் அரண்மனை.

சென்ற ஜூன் மீ 28-ம்உ பக்கிங்காம் அரண்மனையில் மிஸ்டர் N. D. S. சில்வாவும், அவரின் மனைவியாரும் மாட்சிமை தங்கிய அரசர்பிரானுக்கும் இராணிக்கும் அறிமுகஞ் செய்யப் பட்டார்களெனத் தெரிகிறது. அச்சமயத்தில் மிஸ்டர் சில்வாவுக்கு C. B. E. என்னும் பட்டத்திற்குரிய சின்னம் அரசர் பிரானால் அளிக்கப்பட்டது.

## பெரிய மரம்.

கலிபோர்னியாவிலே சிராமாடர் என்ற இடத்திலே "சின விட்டாரியா" என்ற ஒரு பெரியமரம் நிற்கின்றது. இது மூன்று ஏக்கர் சுற்றளவு இருக்கின்றது. இது நடப்பெற்று முப்பத்தைந்து வருடங்கள் ஆகின்றன. ஒவ்வொரு வருடமும் இம்மரத்தின்கீழ் 5000 ஆட்கள் சிராமாடரிலிருந்து வந்து விருந்து நடாத்துகின்றார்கள். இது பூத்திருக்குங் காலத்தில் 50,000 ஜனங்கள் வரை இம்மரத்தைப் பார்வையிட்டார்கள்.

## முதலைக்காவல்.

அன்னும்தேசத்து அரசர் தமது அரிய பொருள்களைத் திருடர்கவராதபடி காப்பதற்கு ஒரு விநோத முறையை அநுசரித்திருக்கின்றனர். அவர்தம் அரண்மனையைச் சேர்ந்தாற்போல் சில ஆழமான குளங்களை வெட்டி அவற்றில் முதலைகளை ஏராளமாய் விட்டிருக்கின்றார். அரண்மனையின் விலையுயர்ந்த ஆபரணங்களையெல்லாம் பெரிய மரக்கட்டைகளைத் துளைத்து அவற்றிற் போட்டு மூடித்தடாகங்களிற் போட்டுள்ளார். முதலைகளுக்கு வேண்டிய உணவு அளிக்கப்படுகின்றது. பொருளுக்கு ஆசைப்பட்டு யாவரேனும் குளத்தில் இறங்கினால் முதலைக்கு இரையாகவேண்டியதுதான்.

## சென்னைச் சர்வகலாசாலைக்கு நன்கொடை.

அன்னிய பாஷைகளில் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களைத் தென்னிந்திய பாஷைகளில் பிரதானமாய்த் தமிழில் மொழி பெயர்ப்பிப்பதற்காகத் திருப்பனந்த முத்துக்கோயிலிலுள்ள ஸ்ரீகாசிவாசி தயம்பிரான் சுவாமிகள் ரூபா 10,000 நன்கொடை யளிக்கத் திர்மானித்திருக்கிறார்.

---

## தாபர சாஸ்திர ஸ்தாபனம்.

வங்காளத்திலே சேர் ஜகதீஸ் போஸ் என்னும் பேர்பெற்ற தாபரசாஸ்திரி ஒருவ ரிருக்கின்றார். இவர் அடிக்கடி ஐரோப்பா அமெரிக்காப் பகுதிகளுக்குச் சென்று பல ஆராய்வுகள் செய்து விசேஷ தேறுதலடைந்திருக்கின்றார். தாபரங்களுக்கும் உயிர் உணர்ச்சி முதலியன உண்டென்பது இவரது திர்மானம். இதனைச் சிறந்த பரீட்சையால் நன்குந் தெளிவாகக் காண்பித்திருக்கின்றனர். இவர் உலகத்தின் எல்லாப் பகுதியாருங் கூடிச் சாஸ்திரங் கற்பதற்காய் வங்காளத்திலே ஓர் சாஸ்திர ஸ்தாபன மமைப்பதற்கு ஆயத்தஞ் செய்கின்றார். அதைப்பற்றி அவர் விடுத்துள்ள விளம்பரமொன்று இப்போது முழு உலகத்திலும் பரந்திருக்கிறதாக அறிகிறோம்.

---

## 3000-மைல் நடந்த நாய்.

காலிபோர்னியாவில் காணமற்போன ஒரு நாய் 3000 மைல் வழி கண்டுபிடித்து பாஸ்டன் நகரிலுள்ள தன் எஜமானன் வீட்டுக்கு நடந்து வந்து சேர்ந்ததாம். இந்த நாயின் பெயர் ஜோர்போர்டு. இதன் சொந்தக்காரரான மிஸ்டர் மாரின் ஹிக்ஸ் வேடிக்கைப் பிரயாணமாகக் காலிபோர்னியா சென்றிருந்தபோது நாய் கெட்டுப்போயிற்று. அது செத்துப்போயிருக்க வேண்டும் அல்லது திருடப்பட்டிருக்க வேண்டும் என்றெண்ணி அவர் தனியே வீடுபோய்ச் சேர்ந்தார். ஆறுமாதம் கழிந்து ஒருநாள் தம் வாசற்கதவு பறண்டப்படுவது கேட்டு அவர் கதவைத் திறக்கவே, வெளியில் தம் நாயைக் கண்டு அதி ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தார். நாய் களைப்பினால் எலும்புந் தோலுமாயிருந்தது. ஆனால் கவலையாகப் போஷித்து அவர் அதைப் பிழைக்கும்படி செய்தார். அந்நாய் எப்படி வழி கண்டுபிடித்து ஒரு கண்டம் முழுவதையும் குறுக்கே கடந்து வந்தது என்பது ஒரு பெரிய மர்மமாகும். ஞாபகசக்தியென்று சொல்ல முடியாது, ஏனெனில் போகும்போது அது பெரிதும் மோட்டார் அடியில் படுத்துத் தூங்கிக்கொண்டு போனது. மோப்பம்பிடித்துக்கொண்டு 3000 மைல் சென்றது என நம்புவதும் அசாத்தியமாகும். ஜோர்ஜ்க்கு வழியில் எத்தனையோ இடையூறுகள் எதிர்ப்பட்டிருக்க வேண்டும். எதிரி நாய்கள், போலீஸ்காரர்கள், ஆறுகள், மலைகள், பசி, பட்டினி, எல்லாவற்றையும் கடந்து வழி கண்டுபிடித்து அந்த நாய் 3000 மைல் நடந்து சென்றது ஓர் அதிசயமே ஆகும்.

---

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

### வில்ஹணீயம்.

இந்நூல் 11-ம் நூற்றாண்டிற் காசுமீரத்தில் விளங்கிய சம்ஸ்கிருதகவியாகிய வில்ஹணனாற் செய்யப்பட்டது இதனை இற்றைக்கு 53 வருடங்கட்கு முன்னர். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரித் தலைமைத் தமிழ் சமஸ்கிருத பண்டிதராக விருந்தவரும், புலோலி ஸ்ரீ வ. குமாரசுவாமிப் புலவரவர்களின் தமையனாருமாகிய "மகாவித்துவான" ஸ்ரீ பு. வ. கணபதிப்பிள்ளையவர்கள் தமிழில்மொழிபெயர்த்து வெளியிட்டனர் அரிய தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டு லோகோபகாரமாக வெளியிடுஞ் செந்தமிழபிமானியாகிய திருமயிலை ஸ்ரீ சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் இதனை இப்பொழுது இரண்டாம் பதிப்பாக அழகுற அச்சிடுவித்து வெளியிட்டிருக்கின்றனர் பிரதியொன்றின் விலை அணா 3. பிரதிகள் "சே. வெ ஜம்புலிங்கம்பிள்ளை, 20 காரணீசுரர் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை" என்னும் விலாசத்திற் பெறற்பாலன. இந்நாலின்கணுள்ள சத்திர வர்ணனையை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் அறுவதித்து வெளியிட்டிருக்கின்றோம்.

### திருமண வினை விளக்கம்

இது விவாககாலத்திற் செய்யவேண்டிய கிரியைகளை வடமொழி மந்திர சகிதமின்றித் தமிழிலே கற்பிப்பதாய் ஒருவரால் எழுதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால்வெளியிடப்பட்டுள்ளது. பிரதியொன்றின் விலை அணா 2. பிரதிகள் மேற்படி கழகத்தாரிடம் பெறற்பாலன.

எமது பார்வைக் கனுப்பிய வில்ஹணீயம், திருமணவினை விளக்கம் என்னும் இப்பிரதிகளின் பொருட்டு அனுப்பியவர்கட்கு மனமுவந்த நன்றி கூறுகின்றேம்.

---

## நல்லூர்க்கந்தசுவாமிகோவில்வழக்கு.

:0:

மேற்படி கோவில் வழக்கு விசாரணை இந்த ஜூலை மீ 16உ திங்கட்கிழமையும், 17உ செவ்வாய்க்கிழமையும், 18உ புதன்கிழமையும் யாழ்ப்பாணம் பெரிய நீதிஸ்தலத்தில் (டிஸ்திரிக் கோட்டில்), நீதிபதி மிஸ்டர் J. C. W. ரொக் முன்னிலையில் நிகழ்ந்தது.

மிஸ்டர் ஹெலிலி வழக்காளிகளின் சாட்சியாகும் தியாகராசக் குருக்களைக் கேட்ட கேள்வியும் மறுமொழியும்:—

(சாட்சிக்கு ஒரு சாதனத்தைக் காட்டி) நீர் தானே இதை மொழிபெயர்ப்பித்தது?- ஆம்.

மற்றெல்லா அறிவித்தல்களையும் மொழிபெயர்ப்பித்தீரா?— இல்லை.

இது வைத்தியலிங்கத்தால் மொழிபெயர்க்கப்பட்டது?— ஆம்.

அவருக்கு என்ன வேலை?

—மொழிபெயர்க்க அநுமதி பெற்றவர்.

உமக்குச் செய்து கொடுத்த முதல் மொழிபெயர்ப்பு இதுதானா அல்லது இதற்கு முன்னும் செய்துகொடுத்தாரா?

—எனக்குத்தெரியாது; இதை நான் அவரிடங் கொடுத்தேன் அவர்மொழிபெயர்த்தபின், சாதனத்தையும் அதன் மொழிபெயர்ப்புப் பிரதியையும் என்னிடம் கொடுத்தார்.

அதில், யாதேனுமொன்றை மாற்றிவிடும்படி மறுபடியும் அதை அவரிடம் கொடுத்தீரா?

—இல்லை.

மிஸ்டர். ஹெலிலி:—சில பிரதான மாற்றங்களுடன் அந்த அறிவித்தலின் மொழிபெயர்ப்புக் கொப்பியொன்று என்னிடமிருக்கிறது. அதிற் சில சொற்களை மாற்றிவிடும்படி அவருக்குச் சொன்னீரா?

—இல்லை; ஒன்றையும் மாற்றிவிடும்படி நான் அவரிடம் சொல்லவில்லை; ஆனால், சில சொற்களை வாசித்து அவருக்கு விளக்கப்படுத்திவிட்டேன்.

அவருக்கு நீர் விளக்கப்படுத்திய சொற்களெவை?

—ராஜா, மனேஜர், என்பனபோன்ற சில பிரதானமான சொற்கள் அதில் இருந்தன; ஆதீனகர்த்தர் என்னும் பதத்தின் கருத்தை அவருக்குச் சொல்லியிருப்பேன்.

அதன் கருத்து என்னவென்று சொன்னீர்?

—அப்பதத்தின் கருத்துத் தர்மகர்த்தா எனச் சொன்னேன். இந்தியாவிலும் சில மடங்களை அது குறிக்கிறதென்று அவருக்கு விளக்கப்படுத்தினேன் அதை எவ்விதமாய் மொழிபெயர்த்தாரென்று அவரைக் கேட்டேன். 'சொந்தக்காரன்' என மொழிபெயர்த்தேன் என்று சொன்னார். அது அப்படியல்ல, அது 'தர்மகர்த்தா'வையே கருதுகின்றது என்று நான் அவருக்குச் சொன்னேன்.

உமக்கு ஆங்கிலம் தெரியுமோ?—கொஞ்சம்.

நீர் அவைகளை விளக்கப்படுத்துமுன் அதை மொழிபெயர்த்துவிட்டாரல்லவா?

—இல்லை; எதிராளியினுடைய பிரதியிலும் அவ்வண்ணமே மொழி பெயர்த்திருக்கிறேனென அவர் எனக்குச் சொன்னார்.

ஆங்கிலத்தில் சாட்சிசொல்ல முடியுமா?

—இல்லை

உமக்கு ஆங்கிலம் தெரியாதபடியால் அந்தப் பதத்திற்குச் சரியான ஆங்கிலபதம் சொல்ல முடியாதல்லவா?

—இல்லை; நான் தமிழில் அதன் கருத்தைச் சொன்னேன்; ஆங்கிலத்தில் அதற்குச் சரியான பதம் எனக்குத் தெரியாது.

உவின்ஸ்லோ என்பவரால் தொகுக்கப்பட்ட தமிழ்-ஆங்கில அகராதியைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா?—இல்லை.

சுதந்திரமென்னுஞ் சொல் உமக்கு விளங்குமல்லவா? அதன் கருத்தென்ன?

—ஆம் ஒருவருக்குச் சொந்தம்.

(ஒரு சாதனத்தைக் காட்டி) இதை யார் பெற்றது?—நான்தான்.

இதை நீர்பெற்றது கொழும்பிலல்லவா?— ஆம்.

இந்தச் சாதனத்தை எடுக்க வேண்டுமென யார் உமக்குச் சொன்னது?

—தம்மாருக்காக இதனை எடுத்துத் தரும்படி வழக்காளிகள் கேட்டார்கள்.

அவர்கள் உமக்குச் சொன்னதென்ன?

—இந்த வழக்குக்கான சாதனங்களைத் தேடுதல் செய்து எடுத்துத்தரும்படியாக என்னைக் கேட்டார்கள்.

மிஸ்டர் நெய்மேர்ஸ்மூலமாக எடுக்கலாமென யார் உமக்குச் சொன்னது?

—நான் இந்தச் சாதனங்களைக் கச்சேரியிலெடுக்கலாமென நினைத்துப் போனேன். கச்சேரியிலுள்ளவர்கள் அங்கே இவை கிடையாவெனவும் அரசாங்க காரியஸ்தரின் கந்தோரில் (Colonial Office) ஒருபோது கிடைக்குமென்றுஞ் சொன்னார்கள்.

நீர் கேட்ட சாதனமென்ன?—தோம்பு.

எதைப்பற்றிய தோம்பு?

—மேடி கோவில் கட்டப்பட்டிருக்கிற நிலத்தைப்பற்றிய தோம்பு.

அதைத்தேடும்படி யாரிடம் சொன்னீர்?

—வடமாகாணத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினேன்.

நீதிபதி:—நீர் கேட்ட சாதனமென்ன?

—நல்லூர்க் கோயில் கட்டப்பட்டிருக்கிற நிலத்துக்குரிய தோம்புப் பதிவில் ஒரு பிரதி தரும்படி கேட்டேன்.

நீர் அதைக்கேட்ட திகதியென்ன?

—எனக்குத் திகதி ஞாபகமில்லை.

மிஸ்டர். ஹெலிலி:—அவர் கொடுத்த பதில் என்ன?

—அவர்கள் அதைக் கச்சேரியில் தேடிப்பார்த்தார்கள்; கச்சேரியில் அவ்விதமான தோம்பு இல்லையெனவும், அரசாங்க காரியஸ்தர் கந்தோரில் தேடிப்பார்க்கும்படியும் சொன்னார்கள்; சில கருமார்த்தமாகக் கொழும்புக்குப் போனபொழுது அரசாங்க காரியஸ்தருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினேன்.

மேடி விஷயத்தைப்பற்றியல்லவா?

—ஆம்; வடமாகாணத் தலைவரைக் கேட்டேனெனவும், அவர் அரசாங்க காரியதரிசியின் கந்தோரில் தேடும்படி சொன்னாரெனவும் நான் அந்த விண்ணப்பத்தில் சொல்லியிருந்தேன்.

மேடி தோம்பைத்தான் நீர் கேட்டதல்லவா?

—ஆம்.

அப்பொழுது நடந்ததென்ன?

—என்னை அழைப்பித்து அங்கேயிருந்த உத்தியோகத்தர் காணிகளின் விபரங்களை எனக்கு வாசித்துக் காட்டினார்.

காணியைப்பற்றி அவர் வாசித்த விபரமென்ன?

—நல்லூரிலே 'குருக்கள்வளவு' என்னும் பெயருடன் மூன்று நாறு காணிகள் உண்டெனவும், நீர் இவைகளில் எதைப்பற்றிக் கேட்கின்றீர் எனவும் என்னைக் கேட்டார். நல்லூர்க் கோயில் இருக்கும் நிலத்துக்குரிய தோம்புதான் எனக்கு வேண்டுமென்றும், அந்தத் தோம்பு சேதுகாவலமுதலியார் மகன் அதாவது, பெரியதாமோதரம்பிள்ளையினுடைய மனைவியின் பெயரில்தான் இருக்கக்கூடுமென்றுஞ் சொன்னேன்.

அந்தத் தோம்பை நீர் பார்த்தீரா?

—பெரியதாமோதரம்பிள்ளையினுடைய காணிக்குப் பக்கத்திலேதான் கோயில் இருக்கிறதென்று அவருக்குச் சொன்னேன்.

அந்தக்காணி 6½ பரப்புக் கொண்டதென்று நீர் அவருக்குச் சொன்னீரா?—ஆம்.

அப்படி ஒரு தோம்பு அங்கே இல்லை அல்லவா?

—இல்லை.

நீதிபதி.—நீர் அவரோடு பேசியதையிட்டுத்தான் தோம்புப் பிரதியை அவர் உமக்குத்தந்திருக்கவேண்டும்?—ஆம்.

மிஸ்டர் ஹெலிலி:—குறித்த நிலம் 7½ பரப்புக் கொண்டதல்லவா? அல்லாமலும் அந்தப் பேரோடு வேறும் இரண்டுகாணிகளிருக்கின்றனவல்லவா?—ஆம்.

இவைகளுக்கு எல்லை சொல்லப்படவில்லையல்லவா? அல்லாமலும், இந்தக்காணிகள் எவையென்று நிச்சயப்படுத்துவதற்கு எவ்வகையான ஆதாரங்களுமில்லையல்லவா?

—எல்லைகள் சொல்லப்படவில்லை.

இந்தப்பேருடன் வேறு எத்தனை காணிகளிருக்கின்றன.

—இரண்டுகாணிகள் உண்டென்று அவர் சொன்னார்.

'குருக்கள்வளவு' என்றவாக்கியத்தின் அர்த்தம் "குருக்களுக்குரிய வளவு" என்பதல்லவா?

—அது குருக்கள் வசிக்கும் வளவு, குருக்களுக்கு உரிய வளவு என்னும் இரண்டுகருத்துக்கும் பொருந்தும்.

முந்தி நீரே, இந்தக்காணி அம்பலவாணர் சுப்பிரமணிய ரென்பவருக்கு உரியதென்றல்லவா சொன்னீர்?—ஆம்;

அந்தப்பெயர் கந்தசாமிக்குரிய பெயரென்றும் சொன்னீரல்லவா?—ஆம்

இந்தக்கோயிலுக்குரிய 100 வருடங்களுக்கு மேற்பட்ட சாதனங்களையல்லவா நீர் தேடினதும் பிரதிகளெடுத்ததும்?

—நான் என்னிடத்திலிருந்த சிலசாதனங்களைத் தேடி எடுத்தேன். மற்றவர்களிடத்திருந்தும் சிலசாதனங்களை வாங்கினேன்.

'அம்பலவாணர் சுப்பிரமணியம்' என்றபெயர் கந்தசுவாமியாரைக் குறிப்பதாக இந்த உறுதிகளில், எதிலாவது, சாதனங்களில் எதிலாவது நீர் காட்டுவீரா?—இல்லை.

இலங்கைத் தேசாதிபதியாயிருந்த மெயிற்லண்ட் உம்முடைய முன்னோரைப் பூசகராக அங்கீகரித்த கடிதமென்று நீர் ஒரு சாதனத்தை இங்கே காட்டினீரல்லவா?—ஆம்.

அந்தச்சாதனத்தின் மூலப்பிரதியை இந்த நீதிஸ்தலத்தில் 5670-ம் இலக்க வழக்கில் அனைத்த சாதனங்களோடு அனைத்ததாகச் சொன்னீரல்லவா?

—ஆம்; என் தகப்பனார் வைத்த வழக்கில்.

இந்தப்பிரதி 1910-ஆ எடுக்கப்பட்டதல்லவா?

—ஆம்; எனது சகோதரன்தான் அதை எடுத்தவர்.

ஏன்?—எனக்குத்தெரியாது.

இந்தப்பிரதியிற்சிலபாகங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன; அப்படி அழிக்கப்பட்டவைகள் என்னவென்று சொல்லுவீரா?

—எனக்குத் தெரியாது.

யார் அதை அழித்தது?

—அதுவும் எனக்குத் தெரியாது.

இந்த வழக்கிலே காட்டப்படும் சாதனங்களெல்லாம் விபரீதமாயிருக்கின்றன, நீர் அவதானமாய் மறுமொழி சொல்லவேண்டும்; அந்த அழிக்கப்பட்டவைகள் என்ன என்று சொல்ல உம்மால் முடியாதுதானோ?

—என்னால் முடியாது; நீர் இதன் மூலப்பிரதியைப் பார்த்தால் அவைகளென்னவென்று அறியலாகும்.

என்னிடத்திலே மூலப்பிரதி யிருக்கிறது.

1876-ஆ குறித்த வழக்கிலே குறித்த வழக்காளிகளு அது திருப்பிக் கொடுக்கப்பட்டதாக அதிற் குறிக்கப்பட்டிருக்கிறது?

—அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

யார் இதைச் செய்ததென்று நீர் சொல்ல முடியுமா?—முடியாது.

அந்த வழக்கிலே வழக்காளிகள் உம்முடைய தகப்பனும் சிறியதகப்பனுமல்லவா? இப்பொழுது அந்த மூலப்பிரதி யெங்கே யிருக்கிறது?

—எங்கேயிருக்கிறதென்று எனக்குத்தெரியாது; இந்தப்பிரதியை என் தமயனரிடத்தில் வாங்கினேன்.

### மிஸ்டர் குலசிங்கம் மேடி சாட்சியைக் கேட்ட கேள்விகள்.

மெயிற்லண்ட் என்னுந் தேசாபதியால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி எங்கே?

—எனக்குத்தெரியாது; அது இப்பொழுது இருந்தால் அதை இந்த வழக்கில் அனைத்திருப்போம்.

காரியதரிசியாயிருந்த மிஸ்டர் மோசெஸ் என்பவரால் இப்பிரதி அத்தாட்சிப்பண்ணப்பட்டதல்லவா?—ஆம்.

மிஸ்டர் நெய்மேர்ஸ் இந்த வழக்கிற் சாட்சி சொல்வாரல்லவா?—ஆம்.

சுப்பிரமணியம் என்பதும் கந்தசுவாமி என்பதும் ஒருவரையே கருதுமென்று சொல்வதற்கு நீர் காட்டும் ஆதார மென்ன?

—தமிழ் நிகண்டில் சுப்பிரமணியசுவாமிக்கு அநேகபெயர்கள் உண்டு. கந்தர் என்பது அவைகளில் ஒன்று.

ஆதீனகர்த்தர் என்னும் பதம் தர்மகர்த்தாவைக்குறிக்குமேயல்லாமல் சொந்தக்காரனைக் குறிக்கவில்லையென்றா நீருஞ்சொல்லுகிறீர்?

—திருவாவடுதுறை ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனமென இந்தியாவில் அநேக ஆதீனங்கள் உண்டு. அந்த ஆதீனங்களின் மனேஜர்மார் அந்த இடங்களின் தர்மகர்த்தாக்களாவர். அவர்கள் ஆதீனகர்த்தர் என்று சொல்லப்படுவார்கள்.

நீர் சம்ஸ்கிருதமும் தமிழும் நல்லாய்ப் படித்திருக்கின்றீரல்லா?—ஆம்.

[நல்லூர்க் கந்தசுவாமிகோயில் ஆதீனகர்த்தர், வண் - வைத்தீஸ்வரன் கோயில் ஆதீனகர்த்தர் முதலியோர் சொல்லிய சாட்சியம் அடுத்த பிரசுரங்களில் வெளிவரும்.]

---


## யாழ்ப்பாணம் முன்மாதிரிப் பாடசாலை.

(The Jaffna Model School.)

மேடி வித்தியாசாலை 1928-ஆ ஆகஸ்ட்மீ 1-ந்உ ஆரம்பிக்கப்படும். இங்கு ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷைகளும் படிப்பிக்கப்படும். சிங்களப்பாஷை படிக்கவிரும்புகிறவர்களுக்கு மேல்வகுப்புகளில் தொடங்கி E. S. L. C. (ஈ. எஸ். எல். ஸி.) வகுப்பு முடியப் படிப்பிக்கப்படும். இப்பாடசாலையில் ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் ஏற்றுக்கொள்ளப்படுவர். இப்பாடசாலையிற் சேர்ந்துபடிக்க விரும்புவோர் அதற்காகிய விண்ணப்பப் பத்திரத்தில் எழுதி வடபிரிவு வித்தியாதரிசிக்கு அனுப்புதல் வேண்டும். குறித்தமாதிரி விண்ணப்பப் பத்திரங்கள் மேடி வித்தியாதரிசியிடம் பெறலாகும். விண்ணப்பப் பத்திரங்கள் இந்த ஜூலைமீ 25-ந்உ முடிவதற்குமுந்தி அனுப்பப்படல்வேண்டும்.

### வித்தியா வேதன விபரம்.

| | ரூ. ச. |
|---|---|
| கிண்டர் கார்டன் வகுப்புத்தொடக்கம் 3ம் வகுப்பு முடிய ... ... ... | -50 |
| 4-ம் தரம் ... ... ... ... ... | 1-00 |
| 5-ம் தரம் ... ... ... ... ... | 1-25 |
| 6-ம் தரம் ... ... ... ... ... | 1-50 |
| 7-ம் தரம் ... ... ... ... ... | 2-00 |
| 8-ம் தரம் ... ... ... ... ... | ?-00 |
| ஈ. எஸ். எல். ஸி. ... ... ... | 4-00 |

H. S. பெறிரு,
வடபிரிவு வித்தியாதரிசி.

யாழ்ப்பாணம்,
வித்தியாபகுதிக் காரியாலயம்,
1928-ஆ ஜூலைமீ.
(G. 935)

## பொன் மதி.

ஜப்பான் தேசத்துத் தாய்மார்கள் தங்கள் பெண்களைக் கலியாணஞ் செய்து கொடுக்கையில் அவர்கட்குப் பின்கண்ட புத்திமதிகளைப் போதிப்பார்களாம்:—

1. விவாகம் முடிந்த தினமுதல் நீ என் பிள்ளையல்ல; உன் மாமி மாமன்மார்தான் உன் தாய் தந்தையராவர். இதுவரை நீ எங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுபோல இனி அவர்களுக்குங் கீழ்ப்படிவாயாக. மாமியாருக்குப் பட்சம் காண்பிக்க மறவாதே.

2. பெண்ணின் மேலான ஆபரணம் புருஷன் சொல் மீறாமை. உன் புருஷன்தான் உன் எஜமானன். அவனிடம் தாழ்ச்சி மரியாதையோடு நடந்துகொள்.

3. பெருமைபாராட்டித் திரியாதே. பெருமையானது உன் புருஷனுக்கு உன்பேரிலுள்ள பட்சத்தை நீக்கிவிடும்.

4. கணவனுக்குமுன் கடுஞ்சொல் கூறாதே; பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல். பொறுமையை பேணு; பொறுத்தார் பூமியாள்வார்; தக்கசமயம் வாய்க்கும்போது சொல்லவேண்டியதைப் பட்சத்தோடு சொல்.

5. பேச்சுக்காரி என்று பேரெடாதே. அதிகம் பேசுகிற பெண் அரைக்காசுக்குதவமாட்டாள். பேச்சு அதிகப்பட்டால் பொய் புரணிகள் அதிகரிக்கும். பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை.

6. ஜோசியனை அழைத்துக் குறிகேளாதே. சகுன சாஸ்திரம் பார்க்கும் பெண் தனக்குத் தானே சத்துருவாகிறாள்.

7. வீட்டுக் காரியங்களை விவேகத்துடன் நடத்தி வரவுக்குத்தகுந்த செலவு செய்.

8. ஆஸ்திக்காரன் மகளாயிருந்தாலும் அலங்காரங்கொள்ளாதே; உன் ஆஸ்தியைப்பற்றிப் பிறர் கேட்கப் பேசாதே. தற்புகழ்ச்சி தகுதியன்று. உன் புருஷன் உறவின்முறையாரை இகழாதே.

9. வலிய வந்திடினும் வாலிபர் சிநேகம் வேண்டாம்.

10. பல வர்ண உடுப்பு உடுக்காதே. எப்போதும் சுத்தமான உடை அணிந்துகொள்.

மேற்கண்ட பத்துக் கற்பனைகளை அனுஷ்டிக்காத பெண்கள் இழிகுலத்தவர் என மதிக்கப்படுவார்களாம். "சத்தியநேசன்."

## வில்ஹணீயம்.

சந்திர வருணனை

"நக்ஷத்திரேசனே! உன் உதரத்துள்ளிருக்கும் 1சின்னத்தைச் சிலர் ஆலமரம் என்றும், சிலர் முயல் என்றும், சிலர் கோமளமான மான் என்றும், சிலர் விஷமென்றும் பலவாறு சொல்லுகின்றனர் இது ஆகாசமன்று, சமுத்திரமே! இங்கே பிரகாசிப்பன நக்ஷத்திரங்களல்ல, சமுத்திர ஜலத்தின் குமிழிகளே! இது சந்திரனன்று, சர்ப்பேந்திரனாகிய சேஷனது குண்டலமே! இது முயற்களங்கமன்று, யோக நித்திரை செய்யும் விஷ்ணுவே!"

"சந்திரனுள்ளே இருக்கும் மறுவைச் சிலர் முயற்களங்கமென்றும், சிலர் சமுத்திரத்தின் சேறு என்றும், சிலர் 2சாரங்கம் என்றும், சிலர் பூமியின் சாயை என்றும், சிலர் இந்திர நீலரத்தினத்தின் ஒளியென்றும் தத்தமது மனத்துக்கிசைந்தவாறு சொல்லுகின்றனர். இரவின் உள்ள அந்தகாரமெல்லாம் பருகப்பட்டு இச்சந்திரனது வயிற்றினின்றன எனவே எனக்குத் தோன்றுகின்றது."

"சந்திர விம்பமானது ஆகாசமாகிய கல்லிலே அரைத்துத் திரட்டிய பசிய சந்தனத் திரட்சிபோலத் தோன்றுகிறது; அதனுள்ளிருக்கும் களங்கம், அச்சந்தனத் திரட்சியினுள்ளே சேர்த்த கஸ்தூரி போலத் தோன்றுகின்றது."

ஆ! ஆ!! பெண்ணே!!! இச்சந்திரன் ஆகாசமாகிய தடாகத்தில் அலர்ந்த வெண்டாமரை மலரோ? மன்மத பாணங்கள் தீட்டும் சாணைக்கல்லோ? சந்தியா காலமாகிய ஸ்திரீயின் பக்ஷோ? இது யாது என்று பார்" என வில்ஹணகவி ஆனந்தாதிசயத்தினாலே சந்திரனை வர்ணித்தனன்.

1 அடையாளம். 2 வில்.

## அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு. 3.

### காமாலைநோய்.

தடுக்கக்கூடிய நோய்களை வராமற் பார்த்துக்கொள்ளுதல் பொதுசனசமூகச்சுகாதாரப்பகுதியாரின் முயற்சிகளிலொன்று என முன்னொரு கட்டுரையிற் கூறியிருக்கிறோம். இப்படி வாராமல் தடுக்கக்கூடிய நோய்களில் முக்கியமானவொன்று காமாலைநோய் அல்லது பாண்டு வியாதி. இந்த நோய் வாராமல் தடுக்கும் வழிவகைகள் இத்தீவிலே இப்போது நடைபெற்று வருகின்றன.

குறித்த காலங்களிலும் குறித்தவிடங்களிலுமுண்டாகும் மற்று மனேக வியாதிகளைப்போலல்லாமல் காமாலை நோய் எக்காலங்களிலும் இத்தீவின் எப்பாகங்களிலுமிருக்கின்றது. 1924ம் 25-ம் ஆண்டுகளில் ஒவ்வொரு மாகாணங்களிலும் நடத்திய பரிசோதனையில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோர் ஒவ்வொருவரிலும் காமாலைநோயை வருவிக்குங் கிருமிப் பூச்சிகள் கிட்டத்தட்ட நூறுவரையிலிருந்ததாகக் காணப்பட்டன. இதைக் கவனமாக விசாரணைசெய்தவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்னவென்றால் ஒரு கூட்டத்தாருக்குள் இக்கிருமிப்பூச்சிகள் ஒவ்வொருவரிலும் சராசரி 25வீதமாக விருக்குமாயின் இந்நோயைக் கையாண்டு மாற்றும் வழிவகைகளைத் தேடிக்கொள்ளலாமென்பதே.

இலங்கையிலே காமாலைநோய் உண்டாகுங் காரணங்களைப்பற்றியும் அதை மாற்றுமல்லது வாராமற்றடுக்கும் வழிவகைகளைப்பற்றியும் அனேகம் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இலங்கையில் புதினப்பத்திரிகை வாசிக்கும் ஒவ்வொருவரும் இந்நோயைப்பற்றிப் பொதுவாக வாசித்தறிந்திருப்பார்களென்பது எங்களுக்குத் தெரியுமாகையால் இங்கே இதைப்பற்றி அதிகம் விபரங்கள் எழுதத் தேவையில்லை. ஆனபடியால் இதைப்பற்றி இங்கே எப்படியும் ஓர் சிறு மொழிப்புரை எழுதுதல் பிரயோசனமுள்ளதாயிருக்கும்.

காமாலைநோய் நாய்களிலும், பன்றிகளிலும் மற்றுமுள்ள வீட்டு மிருகங்களிலும் உண்டாகும். ஆனால் நாமறிந்தளவில் இவைகளால் மனுஷஜாதியாருக்குத் தீங்கு உண்டாகிறதில்லை.

மனிதனிலிருக்கும் வளர்ந்த ஆண்குணி (Parasite) 8-ல் 5 பங்கு அங்குலம் நீளமுள்ள ஓர் வட்டமான கிருமிப் பூச்சியாயிருக்கும். அது குடலிலிருக்கும் சளிக்கட்டுகளையும் இரத்தத்தையும் குடித்துச் சீவிக்கும். மருந்துகொடுத்து இப்பூச்சியை வெளியே எடுக்காமல் விட்டுவிட்டால் அது தன்னுடைய வாழ்நாட்களை அநேக வருஷங்களாக அங்கே கழிக்கும்.

பெண் தூக்குணி (Female Parasite) ஆண் தூக்குணியிலும் பார்க்கப் பெரியதும் மிகவுங் கொடியதுமானது. அது ஒருநாளைக்கு ஏறக்குறைய 2000 முட்டைகள்வரையிலிடும். மனிதனுடைய குடலில் இந்த முட்டைகள் பொரிக்கமாட்டா. இம்முட்டைகள் பொரிக்கிறதற்குத் தகுந்த இடம் ஈரமுள்ளவும், இருட்டுள்ளவும், காற்றும் வெப்பமுமுள்ள தளர்ந்த மணல் தரைதான். இவைகள் 12 மணித்தியாலத்தில் பொரிக்கும்; இந்த முட்டைகள் கண்ணுக்குத் தெரியாத மிகவுஞ் சிறியன.

பொரித்தபின் இந்த முதல் அவதாரப் புழு மழையில்லாத காலங்களில் பூமியைத் துளைத்துக் கொண்டும், மழையுள்ள ஈரமான காலங்களில் தரைமேல் வந்து கொண்டும் பொரித்தவிடத்தைத் தான் சூழ்ந்து கொண்டு இருக்கும். இந்தப் புழுக்கள் அல்லது கிருமிகள் ஒரு பக்கமாய் மிகவுங் கொஞ்ச இடத்துக்குத் தான் நகரும். கிட்டத்தட்ட 10நாட்கள் வரையில் இவைகள் நல்ல இரைகளைச் சாப்பிட்டுக் கொஞ்சக் காலத்தாற் கழன்று போகும் ஒரு விதத் தோற் புரையால் மூடுண்டு மனிதனுடைய குடலில் போய்ச் சேரும் சமயம் வரைக்கும் தூங்கிக்கொண்டு இருக்கும். இக் கிருமிகளைப் பூதக் கண்ணாடி மூலமாயொழியப் பார்க்க முடியாது.

மிகவுஞ் சிறிய செந்துக்களாயிருந்தாலும் இக் கிருமிகள் மனிதனுடைய தேகத்தின் எப்பகுதியிலுமுள்ள தோற்புரையைத் துளைத்துக் கொண்டு உட்செல்லும் வல்லமை யுள்ளன. ஆனபடியால் இந்த முழுதாய் வளர்ந்த கிருமிகளிருக்கும் தரையில் மனிதனுடைய பாதம் சந்திக்குமாகில் இக் கிருமிகள் அதன் தோற்புரையில் ஒட்டிக் கொண்டு தேகத்துட் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இப்படி மனிதனுடைய உடம்பைத் துளைத்துக் கொண்டு உட்செல்லுங் காலங்களில் அவனுக்கு நீர்ச்சிரங்கு (Ground itch) என்று சொல்லப்படும் ஒரு சிரங்கு வியாதி கடுமையாக உண்டு படுகிறது. சுற்றுப் பாதை மார்க்கமாக இக் கிருமிகள் கடைசியாகக் குடலுக்குப் போய்ச் சேருகின்றன. போய்ச் சேர்ந்த ஆறு கிழமைகளில் அவைகள் வயது முதிர்ந்த புழுக்களாய் விடுகின்றன. நோய் தொற்றும் வழிவகைகள் வேறுஞ் சில இருக்கின்றன. ஆனால் அவைகள் இதைப் போல முக்கியமானவையல்ல. (வரும்)

## நாம் மங்களகரமாயிருக்க வேண்டுமேயானால்.

(முன்தொடர்.)

தாங்கள் இருக்கும் வீடுகளை "பகலவன் காரி நாள் பார்மகன்றனி, லகமெழுகிடின் பொருளனைத்து நாசமாம்" என்னும் பிரமாணப்படி ஞாயிற்றுக்கிழமை, சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை என்னும் இக்கிழமைகளை நீக்கி ஏனைய கிழமைகளில் பசுவின் சாணத்தால் மெழுகுதல் கோலமிடுதல் முதலிய அலங்காரங்கள் செய்யப்படுகின்றதோ அந்த வீட்டில் புண்ணிய பலத்துடன் கூடிய இலக்குமியானவள் எக்காலமும் வசிப்பாள், துராஸ்திரி, ஆடு, கழுதை, ஒட்டகம், நாய், இவைகளின் காலிலிருந்து எழும்பும் புழுதியும், உமி, தவிடு, விளக்குமாறு, இவற்றிலிருந்து வரும் தூசும், பிறர் முகம், பிறர் வஸ்திரம், சுளகின் காற்று, இவை ஒவ்வொன்றும், தேகத்திற்பட்டால் அமங்கலத்தை அவசியம் வரச்செய்யும், நகம், மீசை, தலைமயிர், பிறர் ஸ்நானஞ்செய்தமிகுந்த தண்ணீர், பிறர் தேகத்தில் வழிந்தோடும் தண்ணீர், ஆகிய இவற்றைத் தொடுவதால் முறையே தரித்திரம், துக்கம், அபசயம், மரணம், முதலியவற்றை வரச்செய்யும், அமங்கலத்தை "மங்களம்,,என்று சொல்லக்கூடாது. "புண்ணியம்" "பிரசாந்தம்" என்றே சொல்லவேண்டும். ஆடவர்கள் விளக்கை அணைப்பதாலும் பெண்கள் பூசணிக்காயை வெட்டுவதாலும் சில தினத்தன் வம்சம் நாசமாகும், தும்மல், இடறுதல், கொட்டாவி விடுதல் இவைகளால் ஆயுள் குறைந்துவிடும். ஆகையால் அப்பொழுதே பரிகாரமாகத் தும்மலுண்டாகும்பொழுது 'நூறுவயசு வாழ்க' என்றும் இடறுங்கால் அங்குள்ள புழுதியைத் தொட்டு நெற்றியில் பொட்டிடவேண்டும், கொட்டாவி விடுங்கால் விரல்களின் சப்தத்தால் பொத்திக்கொள்ளவேண்டும். இரும்பு, பொன், வெள்ளி, காசு, விதைநெல்லு, தண்ணீர், சோறு, அக்கினி, பால், தானியவகை, சமைத்த கறிவகைகள், உப்பு, மஞ்சள், வஸ்திரம், இவற்றை இரவில் ஒருவருக்கும் வெளியே கொண்டுபோகக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் வீடுபாழாய்விடும். [வியாபாரிகளுக்குத் தோஷமில்லை] வாங்குகிறவனுக்கு அநேக நன்மைகளுண்டாகும். கருப்பவான் சௌளம், சவத்தின் பின்போதல், தீர்த்தயாத்திரை, தானம், பிதிர்மாதருக்களுக்கேயன்றி ஏனையவர்களுக்குச்சிராத்தஞ் செய்தல், சமுத்திர ஸ்நானம், விரத உத்தியாபனம், வீடுகட்டத் தொடங்குதல், வீடு குடிபுகுதல், கிடங்கு கிண்டுதல், தேவப்பிரதிஷ்டை, உத்ஸவம், முதலியவை செய்யக்கூடாது. பிதாவும் மகனும் ஒரேநாளில் சௌளஞ் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் இருவருக்கும் ஆயுள் குறைந்துவிடும். இருகையாலும் தலைசொறியக்கூடாது. உடன்பிறந்த தமையன் விவாகஞ் செய்யாதிருப்பத் தம்பி விவாகஞ்செய்யக்கூடாது. மூத்தபுத்திரர்களுக்கு ஆனிமாசத்திலும் மற்றவர்களுக்குப் பிறந்தமாசம், சென்மநட்சத்திரம், சென்மதிதி, சென்மவாரம், சென்மராசி, இவற்றில் விவாகஞ் செய்வது கூடாது. கன்னிகாதானஞ் செய்யுங்காலத்திலே பிதாமாதாவுஞ் சேர்ந்து செய்வதே உத்தமம். மாதா இல்லாதபோது பிதாவும் பிதா இல்லாதபோது மாதாவும் இருவரும் இல்லாதபோது தாய்மாமனும், அவனும் இல்லாதபோது சகோதரர்கள் சிறியதகப்பன் பெரியதகப்பன் இவர்களே செய்யவேண்டும். நான் அமங்கலன் நான் அமங்கலி யென்றெண்ணக்கூடாது. தன் பொருளைத் தானே தானஞ்செய்ய வேண்டும். கணவன் யாதேனும் ஒருகாரியவசத்தினால் கூப்பிடுவானாயின் நாயகி விரைந்தோடி வரக்கூடாது. அவ்வாறு ஓடிவருபவள் (15) பிறவி வரையும் பெண் காகமாகப் பிறப்பாள். பெண்கள் மஞ்சள் பூசிக்குளித்தல், குங்குமப் பொட்டணிதல், கண்ணுக்கு மைதீட்டுதல், ரவிக்கை, தாம்பூலமுண்ணல், திருமங்கிலியம் நீங்காதிருத்தல் [கழற்றிவைக்கக் கூடாதென்றபடி] தலைசீவுதல், தலையில் அணியும் ஆபரணம் கைகால் காது இவைகளில் தரித்துவரும் ஆபரணமுதலியவைகளைத் தரிப்பார்களேயானால் நாயகனுக்கு ஆயுள்விருத்தியோடு தாங்களும் மங்களகரமாகவே இருப்பார்கள். வரும்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.


## விளம்பரம்.

—:o:—

மத்தியமாகாணத்தில் அநுர்த்துவேவை மாவாடியிலிருந்து தலாவை மாவாடிக்கு ஏறக்குறைய 900 மரங்கள் இழுப்பதற்கு கொழும்பு அதிகவருமானப் பரிபாலனர் கந்தோரில் தெண்டர்பெட்டியில் 1928-ஆ ஆடிமாசம் 31உ செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரையும் கேள்விப்பத்திரம் ஏற்கப்படும்.

ஏனைய விபரங்களை 1928-ஆ ஆடிமாசம் 6உ வெளிவந்த 7652-ம் இலக்க கெஜற் பத்திரிகையிற் காணலாம்.

J. D. SARGENT,
Conservator of Forests,
வனபரிபாலனர்.
வனபரிபாலனர் கந்தோர்,
கண்டி, 11-7-28.
(G. 932)

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனரவர்களால் யாழ்ப்பாணம் மரக்காலையில் 1928-ஆ ஆவணிமாசம் 2உ வியாழக்கிழமை காலை 9-15 மணிக்கு விற்கப்படும்:—

| | | |
|---|---|---|
| I | 175 | பாலைமரங்கள் |
| II | 17 | முதிரைமரங்கள் |
| III | 3 | பொன்னை முருங்கை மரங்கள் |
| IV | 5 | பாலைக்கப்புகள் |
| V | 3 | வேப்பமரக் கப்புகள் |
| VI | 31 | தேக்கந் தடிகள் |
| VII | 60 | கழித்த கப்புகள் |
| VIII | 60 | கழித்த வளைகள் |
| IX | 6 | தோன் முதிரைத்துண்டுகள் |

ஏனைய விபரங்கள் ஆடிமாசம் 13உ வெளியாகும் 7654-ம் இலக்கக் கெஜற் பத்திரிகையில் அறியலாம்.

J. D. SARGENT,
Conservator of Forests,
வனபரிபாலனர்.
வனபரிபாலனர் கந்தோர்,
கண்டி. 7-7-28.
(G. 930)

## 1928-ம் ஆண்டின் மோட்டரதப் பிரமாணம்.

**மோட்டரதங்களின் அனுமதிச் சீட்டு (Licence) பார்க்கத்தக்கதாய் ஷை ரதத்தில் மாட்டப்படல் வேண்டும்.**

1927-ம் ஆண்டின் 20-ம் இலக்க மோட்டரதப் பிரமாணத்தில், 36 (2) பிரிவின்படி, மோட்டரத அநுமதிச்சீட்டு, மழை, வெய்யில் முதலியவற்றால் பழுதடைய மாட்டாதபடி முகப்புக்கண்ணாடிபோல் ஊடுருவிப்பார்க்கக் கூடியவிதமான ஒரு கூட்டினுள் வைத்து, மேற்படி ரதத்திலே பிரதானமான இடத்தில் எவரும் இலகுவாகப் பார்க்கத்தக்கதாய் மாட்டப்படல் வேண்டுமென நிறைவேற்றப்பட்டுச் சிலகாலம் தவணையிடப்பட்ட பிரமாணம், 1928-ம் ஆ ஆகஸ்டுமாசம் 1-ம் உ தொடக்கமாக அநுசரிக்கப்பட வேண்டுமென்பதை இதனால் சகலருக்கும் தெரிவிக்கின்றோம்.

M. சின்னத்தம்பி,
மோட்டரதப் பதிவு உத்தியோகஸ்தர்.
மோட்டரதப்பதிவுகந்தோர்,
கொழும்பு, 12 ஜூலை 1928.
(G. 934)

## விற்பனவு விளம்பரம்.

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் காணித் துண்டுகளை, 1928-ம் ஆண்டு ஆவணிமீ 6உ திங்கட்கிழமை சாயந்தரம் 4 மணிக்கு 1-ம் துண்டுக்காணியும் 1928-ம் ஆ ஆவணிமீ 11-ம் உ சனிக்கிழமை சாயந்தரம் 4 மணிக்கு 2ம் துண்டுக்காணியும் பிரசித்தவேலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்.

கல்லூர் இறை குஞ்சிக்கத்தன்வளவும் சேதுவந்தான் வளவும் பர. கில. இலா. 6½ யும் கல்வீடும் மண்வீடும் கிணறும் செய்பயிரும் வான்பயிரும். எல்லை கிழக்கு தெரு, வடக்கு வயிரமுத்து பொன்னையாவின் ஆதனம், மேற்கு சபாபதி மாணிக்கவாசகருக்குடைய ஆதனம், தெற்கு தில்லையம்பலம் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

(2) ஷை இறை ஞானிவளவு பர. கில. இலா 7 குழி 13½ யும், வான்பயிர் செய்பயிரும். எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு தில்லையம்பலம் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், மேற்கு சபாபதி மாணிக்கவாசகருக்கும் தில்லையம்பலம் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதடங்கலும் அதைச்சேர்ந்தவைகளும்.

மேலே சொல்லப்பட்ட ஆதனங்களை வெந்திசுமேஸ்தரிடத்திலும், அல்லது காணிக்காரனாகிய சபாபதி ஆறுமுகத்திடத்திலும் நேரே முகதாவிலும் தீர்த்துக்கொள்ளலாம்.

ஐ பொன்னுச்சாமி,
வெந்திசுமேஸ்தர்.
(Vis 1252.)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.